ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BTC/B/MCB/05/21/12 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2022 ஆகஸ்ட் 31

முதல்வர்
மாநகர சபை
மட்டக்களப்பு.

**மட்டக்களப்பு மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(I) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மட்டக்களப்பு மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றினை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

## 1.2 முனைபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபையிடமிருந்து பெறவேண்டிய சம்பள மீளளிப்பு தொகை ரூபா 13,005,946 நிதிக்கூற்றில் பெறவேண்டியதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் கணக்குகளில் சொத்துக்கள் குறைவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) முடிவடைந்த வேலைகள் தொடர்பில் மாகாண சபையிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய தொகை ரூபா 2,296,382 நிதிக்கூற்றில் பெறவேண்டியதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) சபைக்கு சொந்தமான பொது நூலகங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 6581 எண்ணிக்கையான ரூபா 892,680 பெறுமதியான புத்தகங்கள் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், கணக்குகளில் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழையான கூற்றுக்களற்ற வகையில் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளடக்க கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது இது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியுள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 இணக்கமின்மைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 3,115,424 | மீளாய்வாண்டு இறுதிவரை பல்வேறுபட்ட தேவைகளுக்கு வைப்பிலிடப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுவரும் இவ்வைப்புக்களை கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவீனத்தை மிகைத்த வருமானம் ரூபா 153,674,005 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த வருமானம் ரூபா 117,648,379 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2021 | | | | 2020 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 36,000,000 | 42,796,971 | 31,311,721 | 34,907,189 | 34,000,000 | 42,278,169 | 32,979,059 | 23.421,939 |
| வாடகைகள் | 6,050,000 | 10,466,896 | 5,796,715 | 7,285,854 | 8,000,000 | 6,533,278 | 7,108,192 | 2,615,673 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 15,000,000 | 13,491,807 | 12,220,807 | 1,540,500 | 13,000,000 | 13,313,442 | 13,646,315 | 269,500 |
| ஏனைய வருமானம் | 18,000,000 | 18,068,228 | 14,600,476 | 8,411,641 | 5,300,000 | 5,907,430 | 5,058,955 | 848,475 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2021 திசெம்பர் 31 வரை ரூபா 54,066842 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் 2021 திசெம்பர 31 வரை ரூபா 10,803,080 தொகையான முத்திரைக் கட்டணம் பெறவேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகியவை சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) எதிர்பார்த்த பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளாமை**

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள 02 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 4,624,000 செலவு செய்து எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த பிரதிபலன்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| செயற்பாடு | 2021 வரை செலவு (ரூபா.) | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) உயிர்வாயு தயாரித்தல் திட்டம் | 02 மில்லியன் | மீளாய்வாண்டு இறுதிவரை உயிர்வாயு உற்பத்தி, பயன்பாடு என்பவை சபையினால் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. |
| (ii) பன்றிகள் வளர்ப்பு | 1,480,066 | எவ்விதமான வருமானமும் சபையினால் உழைக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், திருப்பெருந்துறையிலுள்ள திண்மக்கழிவு நிலையம் மற்றும் திரவப்பரிகரண நிலையம் ஆகியவற்றிற்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் மீளாய்வாண்டு இறுதிவரை பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள சுமார் 08 ஏக்கர் காணி மற்றும் திரவப்பரிகரண நிலையம் அமைந்துள்ள காணி என்பன மண்முனை வடக்கு பிரதேச செயலாளரினால் சபையிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

2018 ஏப்ரல் 23 ஆந் திகதிய ச.செ.பொது/2018/61ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான நிதி மீளாய்வாண்டு வரவு செலவுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த 04 ஆண்டுகளில் சபையின் அதிகார எல்லையினுள் உரிமை மாற்றம் செய்யப்படும் அசைவற்ற சொத்துக்களுக்கான முத்திரை தீர்வை ரூபா 15,939,000 தொகையினை போதிய சான்றுகளின் இணக்கமின்மை காரணமாக மீளாய்வாண்டு இறுதிவரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடை வாடகை மற்றும் குத்தகை தொடர்பில் பல வருடங்களாக நிலுவையாக உள்ள ரூபா 4,521,815 நிலுவையினை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சுற்றுலா விடுதிகளின் வருமானத்தின் மீதான பெறவேண்டிய தீர்வை ரூபா 4,409,641 மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி பணியாளர்கள் தொடர்பில் ஓய்வூதிய திணைக்களத்துக்கு செலுத்தவேண்டிய ஓய்வூதியத் தொகை ரூபா 32,171,455 தொகை பல வருடங்களாக ஒதுக்கப்பட்டு காணப்பட்டிருந்ததுடன், அவற்றை முழுமையாக செலுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் காணியை உபபிரிகை செய்து விற்பனை செய்வது தொடர்பில் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 97 பேர்ச் அளவான ஐந்து காணிகள் முன்னாள் ஆணையாளரினால் தனது மற்றும் அவரது மனைவியின் பெயரிலும் 2003 தொடக்கம் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாற்றம் செய்யப்பட்டிருந்தன. இவ்விடயம் தொடர்பாக முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், சபையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 10,435,141 பெறுமதியான குறித்தொதுக்கப்பட்ட நோக்க மூலதன மானிய அடிப்படையில் கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட நிதி குறித்த நோக்கத்தினை நிறைவு செய்யாது 05 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக வங்கிக் கணக்கொன்றில் எவ்வித உழைப்புமின்றி காணப்படுகின்றது.

(எ) சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்ட வாடி வீடு மற்றும் பணிப்பாளர் இலங்கை வாடி வீடு தொடர்பிலான 2013 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை செலுத்தப்பட வேண்டிய குத்தகை நிலுவை ரூபா 507,000 தொகையினை அறவிட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வேறு அரச நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்ற இழுவை பெட்டிகள் மற்றும் பவுசர்கள் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 14 எண்ணிக்கையான வாகனங்கள் சபையின் பெயருக்கு சொத்தாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2003 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா 6,860,650 தொகை பெறுமதியான தண்ணீர் பவுசர் இயந்திரம் மற்றும் காணாமல் போன நாலு சில்லு உழவு இயந்திரம் என்பன கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது, தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டுவருகின்றது.

(ஒ) சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 27 எண்ணிக்கையான சனசமூக நிலையங்களின் பதிவுடன் தொடர்புபட்ட கோவைகள் முழுமைப்படுத்தப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, மாநகர சபையினால் 31 வகையான பதவிகளுக்குரிய 171 வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வினைத்திறன் தடைதாண்டல்

சபையில் கடமை புரியும் தீயணைப்பாளர்கள் மற்றும் வருமான பரிசோதகர் என்பவர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது கிழக்கு மாகாண சபையினால் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபையில் பணிபுரியும் 13 உத்தியோகத்தர்கள் அவர்களது பதவிநிலையில் எவ்வித முன்னேற்றமுமின்றி காணப்படுகின்றனர்.

(இ) **ஊழியர் பிணை**

சோலை வரி அறவீடு செய்வதற்காக சபையினால் நியமிக்கப்பட்டுள்ள 05 ஊழியர்கள் நாளாந்தம் சராசரியாக ரூபா 50,000 வரைக்குட்பட்ட தொகைகள் கையாளுகின்ற போதிலும், அத்தொகைக்கு நிகராக அவர்களிடமிருந்து பிணைப்பணம் வைப்பாக சபையில் பேணப்படாமல் அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து குறைந்த தொகையான ரூபா 10,000 பிணையாக வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

(ஈ) **ஊழியர் கடன்**

ஓய்வு பெற்ற, மரணித்த, வேலையிலிருந்து நீங்கிய, மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 12 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 557,812 கடன் தொகையை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கையினை சபை எடுத்திருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) **சொத்துக்கள் ஏடுகளில் பதியப்படாமை**

சபைக்குச் சொந்தமான நிலையான சொத்துக்களான காணிகள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றிற்கு மூலதனச் செலவுகள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அம்மூலதனச் செலவுகளின் பெறுமதிகள் அச்சொத்துக்களின் பெறுமதிகளுடன் சேர்க்கப்பட்டு நிலையான சொத்து பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

1951ஆம் ஆண்டின் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் பகுதி II இன் 25ஆம் பிரகாரம் 47 வாகனங்களுக்கு வருமான உத்தரவாதப் பத்திரமும் பகுதி IV இன் 99 மற்றும் 100 ஆம் பிரிவின் பிரகாரம் 20 வாகனங்களுக்கு காப்புறுதிப் பத்திரமும் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) **பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் செய்யப்படாமை**

பவுசர்கள் இழுவைப் பெட்டிகள் உள்ளடங்களான 14 வாகனங்கள் பழுதடைந்து காணப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **சொத்துக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வருமானங்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

---

சபையானது மீளாய்வாண்டில் குத்தகை மற்றும் வாடகைக்கு வழங்கக்கூடிய 215 ஆதனங்களில் 45 ஆதனங்கள் மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்காத காரணத்தினால், கடந்த ஆண்டில் 21 கடைகளை வாடகைக்கு வழங்கியதன் மூலம் உழைத்திருந்த வாடகை வருமானம் ரூபா 5,347,650 தொகை இவ்வருடம் சபையினால் இழக்கப்பட்டிருந்தது.

**3.6 ஒப்பந்த நிருவாகம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) **புகையிரத குறுக்கு வீதி அகலமாக்குதல் - உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2019**

---

2019 ஆம் ஆண்டு ரூபா 03 மில்லியன் தொகைக்கு அனுமதிக்கப்பட்டு மண்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கும் மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சபையினால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி வேலைத்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மதிப்பீட்டின் பிரகாரம் 196 cube ரூபா 994,012 தொகைக்கு மதிப்பிடப்பட்டிருந்தது. Job sheet இன் பிரகாரம் 178 cube கிறவல் பயன்படுத்தப்பட்டதாக காட்டப்பட்டிருந்தது. எனினும் அதற்கான கணிய அளவுகளின் விபரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மதிப்பீட்டின் பிரகாரம் 174 cube ABC ரூபா 1,813,185 தொகைக்கு மதிப்பிடப்பட்டுள்ள போதிலும், Job sheet இன் பிரகாரம் 260 cube காட்டப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் புரிந்துணர்வு Annex-B படிவங்களின் 03 இன் பிரகாரம் 1 ஆம் தரப்பினரிடமிருந்து மேற்படி விடயம் தொடர்பாக முன் அனுமதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு முரணாக ரூபா 710,050 தொகையான 07 வகையான தொடர்பற்ற நிர்மாண பொருட்கள் மாநகர சபையின் வேலைத்தாளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், இதற்கான கொடுப்பனவுகள் மன்முனை வடக்கு பிரதேச செயலாளரிடமிருந்து சபையினால் பெறப்பட்டிருந்தது. இத்தொகையினை மீளச்செலுத்துவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **வீதி நிர்மாண வேலைகள்**

மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் மாநகர சபையின் நிதியேற்பாடுகளிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட 24 வீதி வேலைத் திட்டங்கள் தொடர்பான கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பின்வரும் விடயங்களில் மதிப்பீட்டிற்கு அதிகமாக பயன்படுத்தப்பட்ட ஆற்றுமண் 70 cube, ABC – 63 cube & ¾" Metal- 29 cube கணிய அளவீட்டினை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் வருமாறு.

(ii) மேற்படி திட்டத்திற்கு பாவிக்கப்பட்ட கிரவலின் தரம் குறித்தான மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ICTAD/SCA/05 இன் 601.4(c) பிரகாரம் Master, compaction and CBR அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையின் ஒட்டு மொத்த கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கி உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1)ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டில் சபையில் வருடத்திற்கு நான்கு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கவேண்டியிருந்தும், சபையில் ஒரு குழுக் கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது.

ஈ.கே.கே.எஸ்.எதிரிசிங்க
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக